சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மூலம் 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு 2021–2022–ஆம் நிதியாண்டிற்கு ரூ.25,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.168 | நாள் 29.11.2021
பிலவ, கார்த்திகை – 13
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்க:–

1. 2021–2022–ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை அறிவிப்பு.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண். 9876/ தமிழ்–3/2021, நாள் 28.10.2021.

========

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 31.8.2021 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.46–இல், மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

> " 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் ஊடகங்கள் வாயிலாகத் திருக்குறள் இன்றைய தலைமுறையினரைச் சென்றடையும் வகையில் தொலைக்காட்சிகளுடன் இணைந்தும் இணைய வடிவிலும் அசைவூட்டும் படங்கள், வினாடி வினா, குறும்படங்கள், நடனம் போன்ற கலை வடிவங்களோடு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இதற்கான சிறப்பு நிதியாக ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்"

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரது கடிதத்தில், திருக்குறள் பைபிளுக்கு அடுத்தபடியாக உலக மொழிகளில் அதிகளவில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும் என்றும், சென்னையில் திருவள்ளுவருக்கு எழில்மிகு வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பெற்றும், கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் சிலையும் நிறுவப்பட்டுள்ளது என்றும், திருக்குறளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் ஓவியங்களாகவும் வரைந்து வெளியிடப்பட்டுள்ளன என்றும், அனைத்து அரசு அலுவலகங்களிலும் தினம் ஒரு திருக்குறள் எழுதப்பட்டு வருகிறது என்றும், 1330 குறட்பாக்களை ஒப்புவிக்கும் மாணவச் செல்வங்களுக்கு ஒட்டுமொத்தத் தொகையாக ரூ.10,000/– வழங்கப்பட்டு வருகிறது என்றும், திருக்குறளை தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக சீனம், அரபு, கொரியம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்த்து அச்சிட்டு

வெளியிடப்பட்டுள்ளதாகவும், திருக்குறள் அரபு மொழியில் இசைக் குறுந்தகடாக வெளியிடப்பட்டுள்ளதாகவும், திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் திருவள்ளுவர் விருதும் விருதுத் தொகையாக ரூபாய் 1 இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கி சிறப்பிக்கப்படுவதாகவும், மேலும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வாயிலாக குறள் பீட விருது ஆண்டுதோறும் இருவருக்கு ரூபாய் 5 இலட்சம் வீதம் விருதுத் தொகையாக வழங்கப்படுவதாகவும், செம்மொழி மத்திய நிறுவனத்தால் அட்டவணைப்படுத்தப்பட்ட 22 இந்திய மொழிகளில் திருக்குறளை மொழிப்பெயர்த்து வெளியிட முடிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக ஆறு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன என்றும், மேலும் பல்வேறு வகையில் திருவள்ளுவரையும், திருக்குறளையும் சிறப்பிக்கும் வகையில் ஓவியக் காட்சிக்கூடம், திருவள்ளுவர் பெயரில் தமிழ் இருக்கைகள் நிறுவப்பட்டு சிறப்பு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட வகையில் திருக்குறளுக்கு, தமிழ்நாடு அரசாலும், மத்திய அரசாலும், பல்வேறு தனியார் அமைப்புகளாலும் போற்றி சிறப்பு செய்யப்பட்டு வருவதாகவும், அவ்வகையில் இன்றைய தலைமுறையினரை திருக்குறள் சென்றடையும் வகையில் 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் கீழ்க்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்:–

1) நவீன செல்பேசி செயலி (MOBILE APP) உருவாக்கி அதன் வாயிலாக திருக்குறள் செயல்பாடுகளை கொண்டு செல்லுதல்.
2) தனியார் தொலைக் காட்சிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு திருக்குறள் நவீன நிகழ்ச்சிகளை உருவாக்கி அதில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகளாகவும், திருக்குறள் அறிஞர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளாகவும், 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்து தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ10,000/– பரிசுத் தொகை பெற்ற மாணவ, மாணவியர்களைக் கொண்டும், பல்வேறு தீந்தமிழ் பல்சுவை நிகழ்ச்சிகளை நடத்துதல்.
3) திருக்குறள் அசைவூட்டும் படங்கள் தயாரித்தல்
4) திருக்குறளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் குறும்படங்கள் தயாரித்தல்
5) திருக்குறள் வினாடி வினா நிகழ்ச்சிகள் நடத்துதல்
6) திருக்குறளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் நாட்டிய நாடக நிகழ்ச்சிகளை நடத்துதல்

4. மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகள் உட்பட இத்திட்டத்தை தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக செயல்படுத்திடலாம் என்றும், இத்திட்டத்தை செயல்படுத்திடும் வகையில், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், மேலும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஆய்ந்து பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையிலும் அமைத்திட, தமிழ் வளர்ச்சி இயக்குநரால் திருக்குறள் தமிழ் அறிஞர்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்துக் கொள்ள அனுமதியளித்தும், இத்திட்டத்தினை செயல்படுத்திட சிறப்பு நிதியாக ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது 2021–2022–ஆம் நிதியாண்டில் எட்டு

திங்கள்கள் கழிந்த நிலையில் இன்னும் நான்கு திங்கள்களே எஞ்சியுள்ளதால், இத்திட்டத்தை முதற்கட்டமாக செயல்படுத்திட இந்நிதியாண்டிற்கென ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யுமாறும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் அமைக்கப்பெற்ற வல்லுநர் குழுவால் தெரிவிக்கப்பெறும் கருத்துக்களின் அடிப்படையில் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கான செலவின விவரங்களை மதிப்பீடு செய்து அதனடிப்படையில் 2022–2023–ஆம் ஆண்டிற்கு தேவையான தொகையை தமிழ் இணையக் கல்வி கழகத்திடமிருந்து அறிக்கையாகப் பெற்று அரசுக்கு கருத்துரு அனுப்பி உரிய தொகையை பெற்று வழங்கலாம் என்றும், மேலும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிதி ரூபாய் 2 கோடிக்குள் இத்திட்டத்தை செயல்படுத்திட வேண்டுமென தமிழ் இணையக் கல்வி கழக இயக்குநருக்குத் தெரிவித்தும் 2021–2022–ஆம் நிதியாண்டிற்கு ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும் இத்தொகையை தமிழ் இணையக் கல்வி கழகத்திற்கு பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளித்தும் ஆணையிடப்பெறலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. மேலே பத்தி 3–இல் குறிப்பிட்டுள்ளவற்றில் தேவைப்படும் நிகழ்ச்சிகளுக்கு உரிய விதிமுறைகளின்படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநருக்குத் தெரிவித்தும், மேலும் இத்தொகைக்கான பயனீட்டுச் சான்றினையும் இனவாரியான செலவின விவரங்களையும் அரசுக்கும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும் அனுப்பப்பெற வேண்டுமெனத் தெரிவித்தும் ஆணையிடுமாறும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

6. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவின் அடிப்படையில், 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்துதல் தொடர்பாக கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

அ) தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக, இன்றைய தலைமுறையினரை திருக்குறள் சென்றடையும் வகையில் 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்திட கீழ்க்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:–

(i) நவீன செல்பேசி செயலி (MOBILE APP) உருவாக்கி, அதன் வாயிலாக திருக்குறள் செயல்பாடுகளை கொண்டு செல்லுதல்.

(ii) தனியார் தொலைக் காட்சிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு திருக்குறள் நவீன நிகழ்ச்சிகளை உருவாக்கி அதில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகளாகவும், திருக்குறள் அறிஞர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளாகவும், 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்து தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ10,000/– (பத்தாயிரம் மட்டும்) பரிசுத் தொகைப் பெற்ற மாணவ, மாணவியர்களைக் கொண்டும், பல்வேறு தீந்தமிழ் பல்சுவை நிகழ்ச்சிகளை நடத்துதல்.

(iii) திருக்குறள் அசைவூட்டும் படங்கள் தயாரித்தல்

(iv) திருக்குறளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் குறும்படங்கள் தயாரித்தல்

(v) திருக்குறள் வினாடி வினா நிகழ்ச்சிகள் நடத்துதல்

(vi) திருக்குறளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் நாட்டிய நாடக நிகழ்ச்சிகளை நடத்துதல்

ஆ) இத்திட்டத்தை செயல்படுத்திடும் வகையில், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், மேலும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஆய்ந்து பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையிலும் அமைத்திட, திருக்குறள் தமிழ் அறிஞர்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்துக் கொள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

இ) 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான செலவினத்திற்கு ரூ.25,00,000/-க்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

7. மேலே பத்தி 6 (இ)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202 பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
IFHRMS (த.தொ.கு. 2202 05 800 AK 30903)

8. இத்திட்டத்திற்காக அறிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிதி மொத்தம் ரூ.2,00,00,000/-க்கு (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) மிகாமல், 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு செலவின விவரங்களை மதிப்பீடு செய்து அதனடிப்படையில் கருத்துருவினை தமிழ் இணையக் கல்விக் கழகத்திடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) 2021-2022-ம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2021-2022-ம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகள் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம)செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இத்தொகைக்கான பயனீட்டுச் சான்றிதழை அரசுக்கும், தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும் அனுப்பி வைக்குமாறு தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.52549/ நிதி (தவ(ம)செ) / 2021, நாள் 29.11.2021–ன் வாயிலாக பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.979 (தொள்ளாயிரத்து எழுபத்தொன்பது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை–25.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனிதவள மேலாண்மை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
நிதி (தவ(ம)செ/வ.செ.பொ.I/ வ.செ.பொ.II/வ.வ.I)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

29/11/21